

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் நிர்வாகிகளுடன் சந்தித்து பேசி, கோரிக்கை மனு அளித்தார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சமத்துவ நாள் விழா நிகழ்ச்சியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் 1155 பயனாளிகளுக்கு ரூ.5.07 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

### ஓசூரிலிருந்து தேன்கனிக் கோட்டை வழியாக

# ஒகேனக்கல் செல்லும் சாலை நான்கு வழிச் சாலையாக்கப்படும்!

### சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!



சென்னை, ஏப். 18- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ட்டி.இராமச்சந்திரன்:** என்னுடைய தளி தொகுதியில் ஓசூரிலிருந்து, தேன்கனிக் கோட்டை வழியாக ஒகேனக்கல் செல்கின்ற சாலை, இருவழிச்சாலை, மாநில நெடுஞ்சாலை. அந்த சாலை, கர்நாடக மற்றும் ஆந்திர எல்லைகளை இணைப்பதால், கடுமையான போக்குவரத்து நெரிசல் இருக்கிறது. அந்த இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

**அமைச்சர் எ.வ. வேலு:** சட்டமன்ற உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியில் பல சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக தரமுயர்த்திக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், அப்பகுதியில் தொழிற்சாலைகள் அதிகமுள்ள காரணத்தால், ஒன்றன்பின் ஒன்றாக அங்கு இருவழிச் சாலைகள், நான்கு வழிச் சாலையாக தரமுயர்த்திக் கொண்டு வருகிறோம்.

இந்த ஆண்டுகூட, நான்கு வழிச் சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர் சொல்லுகின்ற சாலையை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள முடியுமா என்று ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் தொகுதியில்

# புதிதாக 3 துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும்!

### சட்டப்பேரவையில் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!



சென்னை, ஏப்.18- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, “உத்திரமேரூர் தொகுதியில் மட்டும் புதிதாக மூன்று துணை மின் நிலையம் அமைப்பதற்கும் - ஒரு துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துவதற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என்று குறிப்பிட்டார்.

கேள்விநேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**க.சுந்தர் :** உத்திரமேரூர் தொகுதி, குண்ணவாக்கம் ஊராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செந்தில்பாலாஜி:** உத்திரமேரூர் தொகுதி, குண்ணவாக்கம் பகுதிக்கு, தற்போது நெல்வாய் 33/11 kV துணை மின் நிலை யத்திலிருந்து 11 kV குண்ண வாக்கம், மின்னாட்டி வழியாக சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குண்ணவாக்கம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை

**க. சுந்தர்:** அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல நெல்வாய் பகுதியிலிருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுவது உண்மைதான். குண்ணவாக்கம் என்பது உத்திரமேரூர் வட்டத்தில் ஒரு firca தலைநகரம். அதில் உள்ள ஒரு 13 கிராமங்களுக்கு, நெல்வாயில் இருக்கின்ற பிரிவு அலுவலகத்திலிருந்துதான் சேவைகள் பெறப்படுகின்றன. இப்பொழுது நெல்வாய் பகுதி செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்றுவிட்டது. ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குண்ணவாக்கம் பகுதியில், பிரிவு அலுவலகத்தை அமைத்துத் தந்தால் போதுமானது. எனவே, குண்ணவாக்கம் பகுதியில் பிரிவு அலுவலகம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் வி.செந்தில்பாலாஜி:** குண்ணவாக்கம் பகுதியில் புதிய பிரிவு அலுவலகம் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். துறை அதிகாரிகளிடத்தில் கேட்டு, அங்கிருக்கக்கூடிய மின் இணைப்பு களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முன்னு ரிமை வழங்கப்படும் .

**க. சுந்தர்:** உத்திரமேரூர் தொகுதியைச் சேர்ந்த காஞ்சிபுரம் மாநகராட்சிக் குட்பட்ட ஓரிக்கை பகுதியில் ஒரு 110/33 11 kV துணை மின் நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு புதிதாக ஒரு 25 MVA power transformer அமைத்தால், அந்தப் பகுதியில் கூடுதலாக அய்யம்பேட்டை, குருவிமலை போன்ற துணை மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில், ஓரிக்கைக்கு அருகில் உள்ள அய்யங்கார்குளம் பகுதி திருவண்ணாமலை மாவட்டத்தையொட்டியுள்ள ஒரு பகுதியாக உள்ள காரணத்தினால், அங்கு சில நேரங்களில் சரியாக மின் விநியோகம் கிடைக்காமல், குறைந்த மின்னழுத்தம் ஏற்படுகிறது. அங்கு ஏற்கெனவே, அப்துல்லாபுரம், அதுவும்திருவண்ணாமலை மாவட்டம். அந்தப் பகுதியில் ஒரு line tap SS இருக்கின்றது. செயல்படக்கூடிய வகையில் அதனையும் மாற்றி, ஓரிக்கையில் power transformer அமைத்தால், அந்தப் பகுதியில் சீரான மின் விநியோகம் சரியாக இருக்கும் அமைச்சர் அவர்கள் அவற்றைச் சரிசெய்து தருவார்களா?

**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக முதலமைச்சர் அவர்கள் 7 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், ஒரு துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கும் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், உத்திரமேரூர் தொகுதியில் மட்டும் 3 புதிய துணை மின் நிலையங்கள், ஒரு துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்காக நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள, ஓரிக்கை துணை மின் நிலையத்தில் இருக்கக்கூடிய 110/33 kV கூடுதலாக ஒரு 25 mva power transformer வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்.

அதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சென்ட்ரல் ரயில் நிலையத்தில்

# 100 சிசிடிவி கேமராக்கள் பொருத்த ஒப்புதல்!

சென்னை, ஏப். 18 - சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கூடுதலாக 100 சிசிடிவி கேமராக்கள் பொருத்த ரயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே காவல் அதிகாரிகள் கூறியதாவது: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு பணிகளில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த நிலையத்தில் 90க்கும் மேற்பட்ட சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கஞ்சா, குழந்தை கடத்தல், செல்போன், நகை திருட்டு உள்ளிட்ட குற்றச்செயல் சம்பவங்களில் ஈடுபடுவோரை விரைந்து பிடிக்க சிசிடிவி கேமராக்கள் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

அந்த வகையில், மேலும் 100 கேமராக்களைப் பொருத்த கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரயில்வே நிர்வாகத்திடம் பரிந்துரை செய்யப்பட்டது. நடைமேடைகள், நுழைவுப் பகுதிகள், பார்சல் சர்வீஸ் வளாகம் மற்றும் அருகில் உள்ள புறநகர் மின்சார ரயில் நிலை யத்தின் சில பகுதிகளையும் தேர்வு செய்து பட்டியல் வழங்கப்பட்டது.

இந்நிலையில், 100 கேமராக்கள் பொருத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, அடுத்த ஓரிரு மாதங்களில் இந்த புதிய கேமராக்கள் பொருத்தி, கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்துவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மயிலம் வடக்கு ஒன்றியம் தீவனூரில் நடைபெற்றது. கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் செஞ்சி அப்துல்மாலிக், மைலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய தி.மு.க. நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வருங்காலத்தில் நெல் கொள்முதல் அளவினைப் பொறுத்து

# பேராவூரணி வட்டத்தில் நெல் சேமிப்புக் கிடங்கு அமைக்கப்படும்!

### சட்டப் பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!



சென்னை, ஏப்.18- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**என்.அசோக்குமார்:** பேராவூரணி தொகுதி, கட்டயங்காடு கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அர.சக்கரபாணி:** தஞ்சாவூர் மண்டலம், பேராவூரணி அருகே உள்ள கட்டயங்காடு கிராமத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நிரந்தர கட்டடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

**என்.அசோக்குமார்:** மிகச் சிறப்பாக செயல்படும் நமது அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகாவில் விவசாயிகள் கொண்டுவரும் நெல்லினை கொள்முதல் செய்து, சேமித்து வைக்க ஏதுவாக கிடங்கு ஏதும் இல்லாததால் பேராவூரணி தாலுகா நாட்டாணிகோட்டையில் ஆத்தாளூர் வீரமாகாளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடம் 12,000 MDS உள்ளது. இதன் சர்வே எண். 16(1A) இதில் கிடங்கு அமைத்திட ஏதுவாக உள்ளது. இந்த இடத்தில் சேமிப்புக் கிடங்கு அமைத்து தரவேண்டுமென்றும், மேலும் ஒரத்தநாடு தாலுகா பகுதியில் பஞ்சநதி கோட்டையில் அமைந்ததுபோல பேராவூரணில் அதிக திறன் கொண்டு Mega DPC நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்றும், பேராவூரணி பகுதியிலுள்ள முதுகாடு போன்ற ஊராட்சிகளில் நெல் பிடிக்கும் நேரடி கொள்முதல் நிலையங்கள் அனைத்திற்கும் DPC கட்டட வசதியும், Concrete களவசதியும் இல்லாததால் அதை அமைத்துத்தருமாறும் அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் நெல் சேமிப்பு நிலையம் அவருடைய தொகுதியிலே வேண்டுமென்று, குறிப்பாக ஆத்தாளூர் வீரமாகாளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்திலே நிலம் போதுமான இடம் இருக்கிறது. அங்கே சேமிப்பு கிடங்கு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதிக் குட்பட்ட பகுதிகளில் நேரடி கொள்முதல் நிலையம் திறப்பது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கண்காணிப்புக் குழுவில் பெறப்படும் விவசாயிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் சராசரியாக ஆண்டொன்றுக்கு 23 நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 20,000 மெட்ரிக் டன் வரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல் மணிகள் சுமார் 18 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்துள்ள பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலைக்கும் மற்றும் அதே பகுதியில் திட்டக்குடியில் அமைக்கப்பட்டுள்ள 14,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் 6,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்பு வளாகத்தில் அந்த நெல்களெல்லாம் சேமித்து வைக்கப்படுகிறது.

மேலும், ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பேராவூரணி வட்டத்தில் வருங்காலத்தில் நெல் கொள்முதல் அளவினைப் பொறுத்து நெல் சேமிப்புக் கிடங்கு அமைப்பது குறித்து சாத்தியக்கூறின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, mega DPC தஞ்சாவூரில், ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியில், பஞ்சநதிக் கோட்டையில் mega DPC திறக்கப்பட்டி ருக்கிறது. அதேமாதிரி அவருடைய தொகுதிக்கு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியின்பேரில், என்னுடைய மானியக் கோரிக்கையிலே, தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களில் 5 mega DPC திறக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர் தொகுதிக்கு ஒன்று கேட்டிருக்கிறார். வருங்காலத்தில் அதைப் பரிசீலித்து தேவை ஏற்படின் அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**என். அசோக்குமார்:** குறியீடு வழங்காத பகுதிநேர அங்காடிகளுக்கு குறியீடு வழங்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, வீரியன்கோட்டை அங்காடியிலிருந்து பிரித்து முடச்சிக்காடு பகுதி நேர அங்காடியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

புக்கரம்பை ஊராட்சி, தில்லங்காடு அங்காடியிலிருந்து பிரித்து மேற்குடிகாடு பகுதி நேர அங்காடியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனாதிகரம்பை அங்காடியிலிருந்து பிரித்து வீரராகபுரம் பகுதிக்கு, பகுதி நேர அங்காடியை பிரித்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். பேராவூரணி செங்கொல்லை அங்காடியிலிருந்து பிரித்து, பேராவூரணி புதுரோடு பகுதியில் பகுதி நேர அங்காடியை அமைத்துத் தர வேண்டுகின்றேன்.

வாடகைக் கட்டடத்தில் செயல்படும் அங்காடிகளுக்கு சொந்தக் கட்டடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

பேராவூரணி தொகுதியில் அங்காடியில் அத்தியாய பொருட்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்து தருமாறு கோருகிறேன்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் குறியீடு சம்பந்தமாகப் பேசியிருக்கிறார். தமிழ்நாட்டிலே 26,618 முழு நேர நியாய விலைக் கடைகளும் மற்றும் 10,710 பகுதி நேர நியாய விலைக் கடைகளும், மொத்தம் 37,328 நியாய விலைக் கடைகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 26,618 முழு நேர நியாய விலைக் கடைகள் உட்பட 27,000 நியாய விலைக் கடைகளுக்கு புதிய விற்பனை முனைய இயந்திரங்கள்point of sale, 7,793 நியாய விலைக் கடைகளுக்கு ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள விற்பனை முனைய இயந்திரங்களும், ஆக மொத்தம் 34,793 நியாய விலைக் கடைகள் விற்பனை முனைய இயந்திரங்களுடன் குறியீடுகள் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 2,535 பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு அவற்றின் தாய்க் கடையின் விற்பனை முனைய இயந்திரத்தின் POS மூலமாக பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு தனிக் குறியீடு மற்றும் விற்பனை முனைய இயந்திரங்கள் POS குறியீடுகளும் தேவை ஏற்படும் நேர்வில் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று வருங்காலத்தில் கண்டிப்பாக அதை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, உறுப்பினர் அவர்கள் கடைகளைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார். ஏற்கெனவே இருக்கின்ற முழு நேரக் கடைகளைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், நகரப் பகுதிகளில், குறிப்பாக ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும், 800 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும், ஊரகப் பகுதிகளில் 800 குடும்ப அட்டைகள், 500 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். அதேபோன்று, கடைகளைப் பிரிக்கும்போது, தாய்க் கடைகளிலிருந்து பிரிக்கும்போது கிராமப் பகுதிகளாக இருந்தால் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் 150 குடும்ப அட்டைகள் இருந்தால் பிரித்துத் தரப்படும். அதேபோன்று மலைப் பகுதியாக இருந்தால் தாய்க் கடையில் 400 குடும்ப அட்டைகளும் ஒரு கிலோ மீட்டர் தூரமும், அதேபோன்று 100 வார்டுகள் இருந்தால் அந்தக் கடைகள் பிரித்துத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும். உறுப்பினர் 3 இடத்திலே அந்தக் கடைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அதை நிறைவேற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, அந்தப் பொருட்கள் ஒரேசமயத்தில் கடைக்குச் சென்றால் கிடைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதனால், முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு பொருட்கள் இன்றைக்கு அரிசியாக இருந்தாலும் சரி, பருப்பாக இருந்தாலும் சரி, பாமாயில், கோதுமை, சர்க்கரை போன்ற பொருட்கள் எல்லாம், அடுத்த மாதத்திற்கு தேவையான பொருட்களை முதல் மாதத்திலேயே 15 ஆம் தேதி, 20 ஆம் தேதியிலிருந்து 60 சதவிகிதப் பொருட்கள் ஏற்கெனவே அங்கே இருக்கின்ற தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கிலிருந்து அந்தந்த ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது.

எனவே, 1 ஆம் தேதியிலிருந்து போதுமான பொருட்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும், மக்கள் ஒரே நேரத்தில் பொருட்களை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனவே, உறுப்பினர் அவர்கள் எந்தக் கடையிலாவது அந்தப் பொருட்கள் ஒரே நேரத்தில் கிடைக்கவில்லையென்று சொன்னால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம் பாசார் கிராமத்தைச் சேர்ந்த குழந்தை செல்வங்கள் சுவேதா மற்றும் சிவசக்தி ஆகியோர்கள், கடந்த ஏப்ரல் 14ஆம் தேதி அன்று பாசார் ஊராட்சியில் அமைந்துள்ள சித்தேரிக்கு தாமரைப்பூ பறிப்பதற்காக சென்றபோது, தவறி ஏரியில் விழுந்து பரிதாபமாக உயிரிழந்ததை அறிந்த, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.ககார்த்திகேயன் ஏப்ரல் 15ஆம் தேதி அன்று அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று, குழந்தைகளின் திரு உடலுக்கு மாலை அணிவித்து குழந்தைச் செல்வங்களை பிரிந்து வாடும் அவர்களது குடும்பத்தினர் மற்றும் ஊர் பொதுமக்களுக்கு கனத்த இதயத்துடன் ஆறுதல் தெரிவித்து வருந்தினார். இதில் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பலர் உடன் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.